# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, விலங்குத் தீனிச் சட்டம்

[1986, ஜூன் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1986, ஜூன் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : ரூபா 1.15

# 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, விலங்குத் தீனிச் சட்டம்

[1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.—ஒ. 66/79

விலங்குத் தீனியை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், விநியோகித்தல் என்பவற்றை ஒழுங்கு செய்வதற்கும், மேற் பார்வை செய்வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டமானது, 1986 ஆம் ஆண்டின 15 ஆம் இலக்க, விலங்குத் தீனிச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனைத்துப் பின்னர் "பதிவாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும விலங்குத் தீனிப் பதிவாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உரிமை யளிக்கும் அதிகாரியாக இருத்தல் வேண்டும். விலங்குத் தீனிக்கான உரிமையளிக்கும் அதிகாரி.

3. ஆள் எவரும் பதிவாளரினால் அதன் சார்பில் வழங்கப் பட்ட உரிமம் ஒன்றின் அதிகாரத்தின் கீழன்றி யாதேனும் விலங் குத்தீனியை விற்பனைக்கென உற்பத்தி செய்தல் ஆகாது. உரிமம் அளித்தல்.

4. (1) விற்பனைக்கென விலங்குத் தீனி எதனையும் உற்பத்தி செய்வதற்கு உரிமம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள விருப்புள்ள ஒவ்வொராளும் அதற்கெனப் பதிவாளருக்கு விண்ணப்பமொன் றைச் செய்தல் வேண்டும். உரிமத்துக்கான விண்ணப்பம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் செய்யப்படும் விண்ணப்பம் ஒன்று பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும் ;

(ஆ) எந்த உத்தேச வியாபாரப் பெயரின் கீழ் விலங்குத் தீனி சந்தைப்படுத்தப்படுதல் வேண்டுமோ அந்த உத்தேச வியாபாரப் பெயர் ;

(இ) எந்தக் கொள்கலத்தில் அத்தகைய விலங்குத் தீனி விற் பனை செய்யப்படவேண்டுமோ அந்த ஏதேனும் கொள் கலத்தின் மீது இடப்படவேண்டிய வரைவு அச்சின் அல்லது சுட்டுத் துண்டின் பிரதி ஒன்று ;

(ஈ) அத்தகைய விலங்குத் தீனி எக்கொள்கலத்தில் விற்கப் பட வேண்டுமோ அக்கொள்கலத்தின் மாதிரிகை ;

(உ) அத்தகைய விலங்குத் தீனியின் கூட்டுச் சேர்க்கை, அதனது தேறிய நிறை, களஞ்சியத்தில் அதனது பயனுறுதி, விலங்குத் தீனியின் பயன்பாடு முடிவுறும் தேதி, ஆகி யவை பற்றிய ஒரு கூற்று; அத்துடன்

(ஊ) பதிவாளரினால் தேவைப்படுத்தப்படக் கூடியனவான அத் தகைய வேறு தகவல்கள்.

உரிமம் வழங்குதல்.

5. (1) நாலாம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல் பதிவாளரானவர், ஒவ்வொரு விடயத்தினதும் தேசியப் பொருளாதாரத்தின் நலன்களையும், சந்தர்ப்பங்களையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விண்ணப்பத்தில் கொண்டுள்ள விபரங்கள் உண்மையானவையும், சொன்மையானவையும் எனத் திருப்திப்பட்டால் அவர் உரிமமொன்றை வழங்கலாம்.

(2) பிரிவு 15 இன் ஏற்பாடுகளுக்கு அமைய, உரிமமொன்றின் வழங்குகையானது, உரிமத்தில் கூறப்பட்ட காலத்திற்குப் பயனுறுத்தல் வேண்டுமென்பதுடன, அதன் சார்பில் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீது புதுப்பிக்கப்படக் கூடியதாதலும் வேண்டும்.

(3) உரிமமொன்று புதுப்பிக்கப்படுவதற்கென (2) ஆம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்று, பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) விண்ணப்பதாரரின் பெயரும், முகவரியும் ;

(ஆ) எக்காலப் பகுதிக்கு உரிமம் வழங்கப்பட்டது என்பது ; அத்துடன

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவரான அத்தகைய வேறு விபரம்.

அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி.

6. (1) பதிவாளர்—

(அ) இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின்மீது விற்பனைக்கென உற்பத்தி செய்யப்பட்ட ; அத்துடன்

(ஆ) 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின் மீது விற்பனைக்கென இறக்குமதி செய்யப்பட்ட

ஏதேனும் விலங்குத்தீனியை அங்கீகரிக்கப்பட்ட ஒரு விலங்குத் தீனியென (இது இதனைகத்துப் பின்னர் "அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வெளிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி தொடர்பில் ஓர் இலக்கத்தைக் குறித்தொதுக்குதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு வெளிப்படுத்துகையும் அமைச்சரால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

**அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியின் விற்பனை.**

7. ஆள் எவரும் 6 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியொன்றைத் தவிர ஏதேனும் விலங்குத் தீனியை விற்பனை செய்தலாகாது.

**விலங்குத்தீனி மதியுரைக்குழு.**

8. (1) பின்வருவோரைக் கொண்டமைந்ததான, (இதனகத்துப் பின்னர் "குழு" எனக்குறிப்பீடு செய்யப்படும் விலங்குத்தீனி மதியுரைக்குழு ஒன்று இருத்தல் வேண்டும்.)

(அ) இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும் ஆள், அல்லது அப்பணிப்பாளரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஓர் ஆள், விலங்கு அபிவிருத்தி, சுகாதாரப் பணிப்பாளர் ; அத்துடன்

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்கள் அதாவது—

(i) விலங்குத்தீனி வியாபாரத்தின் பிரதிநிதி ஒருவர் ; அத்துடன்

(ii) விலங்குத்தீனி தொடர்பான கருமங்களில் தொழில் நுட்ப அறிவும், அனுபவமும் கொண்ட வேறு மூன்று ஆட்கள்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்கள் ஆதல் வேண்டும்.

(3) பணிப்பாளரானவர், சமூகமளித்திருப்பாரெனின், குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்துக்குப் பணிப்பாளர் வருகைதராதுள்ள போது, அத்தகைய கூட்டத்துக்குத் தலைமை தாங்குவென, சமூகமாயுள்ள உறுப்பினர்கள் தம்முள் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் உறுப்பினரும் இறப்பதன் மூலம் அல்லது பதவி விலகுவதன்மூலம் அல்லது, அமைச்சரால் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம், முன்னரே தனது பதவியை வறிதாக்கினாலன்றி அத்தகைய பதவிக்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலப் பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்:

ஆயின், இறந்துள்ள அல்லது விலகியுள்ள அல்லது வேறு வகையில் பதவியை வறிதாக்கியுள்ள உறுப்பினரொருவரின் இடத்துக்கு நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய எவ்வுறுப்பினரை அடுத்துப் பதவிக்கு வருகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(5) அமைச்சரானவர், பணிப்பாளர் தவிர்ந்த எவரேனும் உறுப்பினரை, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அதற்கான காரணம் எதுவும் தராது பதவியினின்று அகற்றலாம் ; அத்துடன் அத்தகைய அகற்றுகை எந்நீதிமன்றத்தினாலும் அல்லது நியாயசபையினாலும் கேள்விக்கு உட்படுத்தப்படுதலாகாது.

(6) காலம் கழிவதன் மூலம் பதவியை வறிதாக்கும், பணிப்பாளர் தவிர்ந்த எவரேனும் உறுப்பினர், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் தவிர்ந்த வேறு எவரேனும் உறுப்பினர், எநநேரத்திலேனும் இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது இயலாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிய இயலாதவராகவிருப்பின், அமைச்சரானவர், அத்தகைய காலத்திறகு அவரின் இடத்தில் பதிற்கடமை புரியவென, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்ட அதே வகையில், வேறெவரேனும் ஆளை நியமிக்கலாம்.

(8) அமைச்சரானவர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அத்தகைய உறுப்பினர்களின் ஊதியத்தையும் அத்தகைய கொடுப்பனவின் முறையையும் தீர்மானிக்கலாம்.

விதிகள்.

9. (அ) குழுவானது, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவைதொடர்பிலும் விதிகளை ஆக்கலாம் :—

(i) அதனது கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை ;

(ii) அதனது அலுவல்களை நடத்துதல் ; அத்துடன்

(iii) அதனது பணிகளை நிறைவேற்றுவதுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான எல்லாக் கருமங்கள்.

(ஆ) அத்தகைய விதிகள், குழுவின் எல்லா உறுப்பினர்களும் சமுகமாயிருக்கும் கூட்டம் ஒன்றில் ஆக்கப்படுதல் வேண்டும்.

"குழுவின் பணிகள்."

10. குழுவின் பணிகளாவன பின்வருவனவாகவிருத்தல் வேண்டும்:—

(i) விலங்குத்தீனிக்கு உரிமமளித்தல், விற்பனைக்கென விலங்குத் தீனியை உற்பத்திசெய்தல், களஞ்சியப்படுத்துதல், தயாரித்தல், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் விற்பனை என்பன தொடர்பான ஏதேனும் கருமத்தின் மீது பதிவாளருக்கு மதியுரை வழங்குதல் ;

(ii) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் கூட்டுச் சேர்க்கை, வலு, தரம், தூய்மை பற்றி ஆகக் குறைந்த நியமத்தை நிர்ணயித்தல் ;

(iii) அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியின் கேடான அல்லது ஆற்றலற்ற பொருட்கள் இருக்கவிடப்படக்கூடிய அதி உயர்ந்த மட்டத்தை நிர்ணயித்தல் ;

(iv) விலங்குத் தீனியின் இறக்குமதி, அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியின் ஏற்றுமதி, அத்துடன் விலங்குத் தீனி கலவைக்கூறு என்பன தொடர்பான கருமங்கள் மீது இறக்குமதிகள், ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளருக்கு விதந்துரைத்தல் ;

(v) அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனி எந்த விதத்தில் பகுப்பாய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதைத் தருதல் ; அத்துடன்

(vi) மேற்சொல்லப்பட்ட கருமங்களுடன் தொடர்புபட்டவையான அல்லது அவற்றில் இடைநேர்விளைவானவையான விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வேறு எவையேனும் நடவடிக்கைகளை எடுத்தல்.

11. எக்கொள்கலனில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி விற்கப்படுமோ அக்கொள்கலன் ஒவ்வொன்றிலும் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது சுட்டுத்துண்டு இடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அச்சுரு அல்லது சுட்டுத்துண்டு சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்னும் மொழிகளில் பினவரும் விபரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் :— அச்சுருவில் அல்லது சுட்டுத் துண்டில் கூறப்பட வேண்டிய விபரங்கள்.

(அ) அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி எந்த வியாபாரப் பெயரின் கீழ் விற்பனை செய்யப்படுமோ அந்த வியாபாரப் பெயர் ;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் தீவிர கலவைக்கூறுகளின் பொதுப் பெயர்கள் ; இவை அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் வியாபாரப் பொருக்கெனப் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்களின் அளவில் அரைவாசியிலும் பார்க்கச் சிறியதாயிராத அளவினவானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், வியாபாரப் பெயருக்கு நேரடியாகக் கீழே இடப்படுதலும் வேண்டும்;

(இ) அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் கூட்டுச்சேர்க்கைக் கூற்று ஒன்று. இக்கூற்று நிறைக்கு இன்ன நூற்று வீதம் என்ற அடிப்படையிலும் அத்துடன் திரவக கூத்திருப்புகளின் விடயத்தில் ஒரு லீற்றருக்கு எத்தனை கிராம் எனவும் வெளிப்படுத்தல் வேண்டும்;

(ஈ) உற்பத்தியாளரின் பெயரும், முகவரியும்;

(உ) அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியானது தனித் தீனியா அல்லது தீனிச் சேர்க்கையா என்பதைப பற்றிய ஒரு கூற்று ;

(ஊ) இச்சட்டத்தின் கீழ் ஓர் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி என வெளிப்படுத்தப்பட்டதென விலங்குத் தீனியைக் குறிப்பிடுவதான ஒரு சின்னத்தினமீது "1986, விலங்குத் தீனிச் சட்டத்தின் கீழான அங்கீகரிக் கப்பட்ட விலங்குத்தீனி" என்னும் கூற்றும், பதிவாளரினல் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் இலக் கமும்;

(எ) விதித்துரைக்கப்படக்கூடியனவான அத்தகைய வேறு விபரங்கள்.

குழுவானது தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொள்வதும் அறிக்கை சமர்ப்பிப்பதும்.

12. அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியின் விருத்தி, உற்பத்தி, பதனிடுகை, விநியோகம், விற்பனை தொடர்பிலான ஆய்வுகளைக் குழு மேற்கொள்ள வேண்டுமெனபதுடன், அக்கருமங்களை மீளாய்வில் வைத்திருத்தலும் வேண்டும்; அத்துடன் அமைச்சருக்குக் காலத்திற்குக் காலம் அவ்விடயங்களின் மீது அறிக்கை செய்தல் வேண்டுமென்பதோடு, அமைச்சருக்கு, அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் கட்டுப்பாடு, மேற்பார்வை, பயன்பாடு, சந்தைப் படுத்தல், விநியோகம் என்பன பற்றித் தேசிய பொருளாதாரத் தின் நலனை கருதி, அது, அவசியமென அல்லது நன்மையான தெனக் கருதுவதான அத்தகைய தீர்மானங்கள் பற்றி விதப்புரை செய்தலும் வேண்டும்.

அமைச்சரின் வேண்டுகோளின் மேல் குழு அறிக்கை கொடுத்துதவுதல்.

13. (1) அமைச்சரின் வேண்டுகோளின்பேரில் குழுவானது, அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் விருத்தி, உற்பத்தி, பதனிடுகை, விநியோகம் விற்பனை தொடர்பான ஏதேனும் குறிப்பிட்ட கருமத்தின் மீது ஆய்வுகளைத் தயாரித்து அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், குழுவானது அது விரும்பத்தக்கதெனக் கருதும் அத்தகைய அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதும், அத்துடன் அத்தகைய விதப்புரைகளைச் செய்வதும் அதனது கடமையாதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் அதனது கடமைகளையும், பணிகளையும், நிறைவேற்றுவதில் குழுவானது தொழில்நுட்ப, புள்ளி விவரத் தகவல்களையும் மதியுரையையும் பெறும் நோக்கத்துக்கென ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின், பகிரங்கக் கூட்டுத்தாபனத் தின் அல்லது வேறேதேனும் நிறுவனத்தின் உதவியைக் கோரலாமென்பதுடன், விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய அரசாங்கத் திணைக்களம், பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது வேறேதேனும் நிறுவனம் அத்தகைய உதவியைக் கொடுத்தல் அதன் கடமையாதலும் வேண்டும்.

ஆய்வுகளையும் அறிக்கைகளையும் வெளியிடுதல்

14. பன்னிரண்டாம், 13 ஆம் பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட குழுவின் ஆய்வுகளும், அறிக்கைகளும் அமைச்சரின் அங்கீகாரத்துடன் பகிரங்கப்படுத்தப்படலாம்; அத்துடன் அமைச்சரானவர், பொருத்தமானதென அவர் கருதுமிடத்து, அத்தகைய ஆய்வுகளுக்கும், அறிக்கைகளுக்கும் பயனளிக்குமாறுப் பணிப்பாளரைப் பணிக்கலாம்.

உரிமத்தை இல்லாதாக்கல்.

15. (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை ஆளெவரும் மீறுகின்ற விடத்து, அல்லது தேசியப் பொருளாதாரத்தின் நலன் கருதி, அவ்வாறு செய்தல் அவசியமானதெனப் பதிவாளர் கருதுகின்ற விடத்து, அவர், குழுவின் மதியுரையுடன், 5 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரியமொன்றை, கட்டளை மூலம் இல்லாதாக்கலாம் அல்லது நிறுத்தலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழான கட்டளை எதுவும், அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய காலத்துக்குள் அத்தகைய கட்டளையானது ஏன் ஆக்கப்படக்கூடாதெனக் காரணம் காட்டும்படி கேட்கும் ஓர் அறிவித்தலின் பின்னரும் அத்தகைய காலத்தினுள் காரணம் காட்டத் தவறும் இடத்தும் அல்லது அவர் போதிய காரணம் காட்டத் தவறிய இடத்தும் தவிர, உரிமம் பெற்றவருக்கு எதிராக ஆக்கப்படுதலாகாது.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தைப் பதிவாளர் இல்லாதாக்குமிடத்து அல்லது இடைநிறுத்துமிடத்து, அத்தகைய உரிமத்தை உடையவர் உற்பத்தி செய்த அத்தகைய விலங்குத் தீன், அங்கீகரிக்கப்பட்டதொரு விலங்குத் தீனியாக இல்லாதொழிதல் வேண்டும்.

(4) ஒராம் உட்பிரிவின் கீழான ஒவ்வோர் இல்லாதாக்குகையும் அல்லது இடைநிறுத்துகையும் கசெற்றிலும், சிங்கள, தமிழ், ஆங்கிலப் புதினப் பத்திரிகைகளிலும் வெளியிடப்படும் கட்டளை மூலமாக விளம்பரப்படுத்தல் வேண்டும்.

கொள்கலனில் அல்லது கூட்டுச் சேர்க்கையில் மாற்றம்.

16. ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் கொள்கலனில் அச்சுருவில், அல்லது சுட்டுத்துண்டில் அல்லது கூட்டுச் சேர்க்கையிலான மாற்றமெதுவும், அதன் சார்பில் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டு, முன்னப்பட்ட அத்தகைய மாற்றம் தொடர்பில் பதிவாளரிடமிருந்து முன்னைய அங்கீகாரத்தைப் பெற்றாலன்றி, ஆளெவரினாலும் செய்யப்படுதலாகாது.

மேன்முறையீடுகள்.

17. (1) ஐந்தாம் பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று நிராகரிக்கப்பட்டுள்ளதால் அல்லது 15 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்று இல்லாதாக்கப்படுவதால் அல்லது இடைநிறுத்தப்படுவதால் இன்னலுறும் எவரேனும் ஆள், அத்தகைய நிராகரிப்பு இல்லாதாக்குகைக்கு அல்லது இடைநிறுத்துகைக்கு எதிராக, இதனகத்துப் பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும் அமைச்சரின் அமைச்சினது செயலாளருக்கு, அத்தகைய ஆளுக்கு அத்தகைய முடிவானது அறிவிக்கப்பட்டதன் பின்னரான அறுபது நாட்களுக்குள்ளாக எழுத்திலான மேன்முறையீடு ஒன்றைச் செய்யலாமென்பதுடன், செயலாளரானவர் தமக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டைக் கையாளுகையில், அத்தகைய மேன்முறையீடு எந்தக் கட்டளைக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ளதோ அந்தக் கட்டளையை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது நிறுத்தலாம்.

(2) மேன்முறையீடு ஒன்றின் மீது செயலாளரின் முடிவு எத்தகையனவுமான எல்லா நோக்கங்களுக்காகவும் முற்முனதும் இறுதியானதும் ஆக இருத்தல் வேண்டுமெனபதுடன், எதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் கேள்விக்குட்படுத்தப் படுதலுமாகாது.

அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியின் உற்பத்தி, விற்பனை, விநியோகம் என்பன மீதான தடை.

18. ஆளெவரும்—

(அ) பத்தாம் பிரிவின் கீழ் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியனவான அளவுகளை விஞ்சியதாக ஏதேனும் இயற்கையான அல்லது சேர்க்கப்பட்ட கேடான பதார்த்தத்தை அல்லது ஆற்றலற்ற பொருளைக் கொண்டிருப்பதான ;

(ஆ) கலப்படம் செய்யப்பட்டதான அல்லது பிழைவழிப் பெயர் இடப்பட்டதான ;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுவதான அல்லது அவற்றிற்கு முரணான,

ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியை விற்பனைக்கென உற்பத்தி செய்தலோ, தயாரித்தலோ அல்லது களஞ்சியப்படுத்தலோ அல்லது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியை விற்றலோ அல்லது விநியோகித்தலோ ஆகாது.

அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனி கலப்படம் செய்யப்பட்டதெனக் கருதப்படுதல்.

19. அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி ஒவ்வொன்றும், இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட்ட கூட்டுச்சேர்க்கை, வலு, தரம், தூய்மை ஆகியவற்றிற்கான நியமத்துடன் அதனது கூட்டுச் சேர்க்கை, வலு, தரம், தூய்மை ஆகியவற்றோடு இணங்கிச் செல்லத் தவறுமாயின், இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள், கலப்படம் செய்யப்பட்டதெனக் கருதப்படுதல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனி பிழை வழிப் பெயர் இடப்பட்டதெனக் கருதப்படுதல்.

20. இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனி ஒன்று—

(அ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் ஏதேனும் கொள்கலத்திலுள்ள அச்சுரு அல்லது சுட்டுத்துண்டு அல்லது பொதி, பொய்யான முறையில், பிழைவழி உய்க்கும் முறையில், அருட்டும் முறையில், அல்லது அதனது கூட்டுச் சேர்க்கை, வலு, தரம், தூய்மை அல்லது பாதுகாப்பு தொடர்பில் தவறான கருத்தை உண்டாக்கும் சாத்தியமுள்ளதான முறையில் ஏதேனும் கூற்றை, வடிவமைப்பை அல்லது உபாயத்தைத் தாங்கியிருந்தால் ;

(ஆ) வேறோர் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி எந்தப் பெயரின் கீழ் விற்கப்படுகின்றதோ அல்லது விற்பனை செய்ய முன்வைக்கப்படுகின்றதோ அல்லது விற்பனைக்கென வெளிக்காட்டி வைக்கப்படுகின்றதோ, அப்பெயரின் கீழ் அவ்விலங்குத் தீனியின் போலியொன்றாக அல்லது அதைப் பதிலிடுவதாக அல்லது அதுவென அருட்டும் சாத்தியமுள்ள அத்தகைய முறையாகத் தோற்றுவதாக இருந்தால், அத்துடன் துலக்கமாக அது

சுட்டுத் துண்டிடப்படாதிருந்தால் அல்லது அதன் உண்மைப் பண்பைச் சுட்டிக்காட்டக்கூடியவாறு சுட்டுத் துண்டு துலாம்பரமாக ஒட்டப்படாதிருந்தால்

(இ) அது எந்த இடத்தின் அல்லது நாட்டின உற்பத்தியெனக் குறிப்பிடப்பட்டுள்ளதோ அவ்விடத்தின் அல்லது நாட்டின் பொருளாக இல்லாதிருந்தால்;

(ஈ) வேறோர் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி விற்பனை செய்யப்படும் அதே பெயர்மூலம் அது விற்பனை செய்யப்பட்டால் அல்லது விற்பனைக்கென முனைவைக்கப்பட்டால்;

(உ) இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க அது அச்சிடப்படடோ அல்லது சுட்டுத்துண்டு இடப்பட்ட அல்லாதிருந்தால்,

பிழைவழிப்பெயர் இடப்பட்ட ஒன்றெனக் கருதப்படல் வேண்டும்.

**ஆகக்குறைந்த அளவு நியமம் பேணப்படுதல் வேண்டும்.**

21. பத்தாம் பிரிவின்கீழ், ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனிக்கென, ஆகக்குறைந்தளவு நியமமொன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளவிடத்து, விற்பனைக்கென ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியை ஆளெவரும் உற்பத்தி செய்யவோ, அல்லது அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் குழுவினால் நிருணயிக்கப்பட்ட அத்தகைய ஆகக்குறைந்தளவு நியமத்தைப் பேணினாலொழிய ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியை விற்பனை செய்யவோ அல்லது விளம்பரப்படுத்தவோ ஆகாது.

**கட்டுறுத்து.**

22. (1) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியின் உற்பத்தியாளர், விநியோகத்தர் அல்லது தரகு முகவர் அல்லது வணிகர் எவரும், அவர், அத்தகைய விலங்குத்தீனியின் கூட்டுச் சேர்க்கை, வலு, தரம், தூய்மை தொடர்பில் கட்டுறுத்தொன்றை எவரேனும் ஆளுக்குக் கொடுத்தாலன்றி அத்தகைய ஆளுக்கு அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியை விற்பனை செய்தலாகாது.

(2) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியின் எவரேனும் உற்பத்தியாளர் அல்லது விநியோகத்தர், அல்லது ஒரு தரகு முகவர் அல்லது வணிகர் பொய்யான, பிழைவழி உய்க்கும் அல்லது உறுபடும் முறையில் கட்டுறுத்தொன்றை அளித்துள்ளவிடத்து, இச்சட்டத்தின்கீழ் அவர் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

**அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களும் அவர்களது பணிகளும்.**

23. (1) பணிப்பாளரானவர், இச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியதான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களைத் தமது திணைக்களத்திலிருந்து பெயர்குறித்து நியமித்தல் வேண்டுமெனபதுடன், அத்தகைய அலுவலர்கள் "அங்கீகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள்" என அறியபபடுதலும் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்—

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எதனையும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அல்லது கட்டளை எதனையும் எவரேனும் ஆள் மீறியுள்ளாரா எனக் கண்டறியலாம்;

(ஆ) விற்பனை நோக்கத்திற்காக, தமது உடைமையில் ஏதேனும் விலங்குத் தீனியை வைத்திருக்கும் எவரேனும் ஆளிட மிருந்து அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியின் பகுப்பாய்வுக்கென மாதிரிகள் கேட்டுப் பெற்றுக்கொள்ள லாம்;

(இ) இச்சட்டத்தின்கீழான தத்துவங்கள், கடமைகள், பணிகளைப் பிரயோகிப்பதுடன், புரிவதுடன், நிறைவேற்றுவதுடன் தொடர்புடையனவான அல்லது அவைகளை எய்தப்பெறு வதிலான செயல்களையும், கருமங்களையும் செய்யலாம்.

(3) எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர், இச் சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிகளின்கீழ் அவரது பணிகளை நிறைவேற்றுவதில் நாளின் எல்லா நியாயமான நேரங்களிலும் ஏதேனும் வளவினுள் செல் லலாம். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், அத்தகைய உட்புகுதல் காரணமாக அல்லது இச்சட்டத்தைப் பின்பற்றி அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றி அவரது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோ கிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அவசியமாகக் கூடிய அத்தகைய எதனையும் நல்லெண்ணத்துடன் அத்தகைய வளவுகளில் புரிவதன் காரணமாகத் தவறுக்குப் பொறுப்பாத லாகாது.

(4) சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அல்லது அவ் விடத்தில் காணப்படும் ஒவ்வோர் ஆளும், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் இச்சட்டத்தின்கீழ், தமது கடமைகளையும், பணிகளையும் நிறைவேற்றுவதற்கு இயலச்கூடியவகையில், தமது தத்துவத்தி லுள்ள எல்லா நியாயமான உதவிகளையும் அளித்தல் வேண்டு மென்பதுடன், இச்சட்டத்தினதும் ஒழுங்குவிதிகளினதும் நிருவாகம் தொடர்பில் அவர் நியாயமாகத் தேவைப்படுத்தக் கூடிய அத்த கைய தகவல்களை அவருக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(5) இச்சட்டத்தின்கீழான அவரது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுவதில் ஓர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரை, ஆளெ வரும் தடை செய்தலோ, அனுப்புதலோ அல்லது பிழைவழி இட்டுச் செல்லுதலோ ஆகாது.

மாதிரிகளை இரசாயனப் பகுப்பாய்வு செய்தல.

24. (1) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் மெய்ம்மைபற்றி ஐயப்படு வதற்கு நியாயமிருந்து அத்துடன் சம்பந்தப்பட்ட அத்தகைய அங் கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனி இரசாயனப் பகுப்பாய்வைத் தேவைப் படுத்துகின்றதென அபிப்பிராயப்படுமிடத்து, விடயத்திற்கேற் றாற்போல, உற்பத்தியாளரின், இறக்குமதியாளரின், அல்லது விற் பனையாளரின் அல்லது அத்தகைய உற்பத்தியாளரின, இறக்கு மதியாளரின் அல்லது விற்பனையாளரின, முகவரின் முன்னாக அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் மாதிரியொன்றை அவர் பெறுதல் வேண்டுமென்பதுடன்—

(அ) உடனடியாக, விடயத்திற்கேற்றாற்போல, உற்பத்தியாள ருக்கு, இறக்குமதியாளருக்கு அல்லது விற்பனையாள

ருக்கு அல்லது உற்பத்தியாளரின், இறக்குமதியாளரின், அல்லது விற்பனையாளரின் முகவருக்கு அத்தகைய மாதிரியை இரசாயனப் பகுப்பாய்வுக்கெனச் சமர்ப்பிக்கும் தமது முன்னத்தை அறிவித்தலும் வேண்டும்; அத்துடன்,

(ஆ) உடனடியாக, மாதிரியை மூன்று சம பிரிவுகளாகப் பிரித்து அவற்றின் தன்மை அனுமதிக்கக்கூடியவாறு அத்தகைய விதத்தில் வெவ்வேறாக ஒவ்வொரு பாகத்துக்கும், குறியிடுவித்தும், இலச்சினையிடுவித்தும் அத்தகைய பாகங்களுள் ஒன்றை, விடயத்திற்கேற்றுற்போல, உற்பத்தியாளருக்கு அல்லது இறக்குமதியாளருக்கு அல்லது விற்பனையாளருக்கு, அல்லது அத்தகைய உற்பத்தியாளரின, இறக்குமதியாளரின் அல்லது விற்பனையாளரின் முகவருக்குக் கொடுத்தல் வேண்டும்; அத்துடன மிகுதியான பாகங்களை அதிகாரமளிக்கப்பட்ட இரசாயனப பகுப்பாய்வாளருக்கும் பதிவாளருக்கும் அனுப்புதல் வேண்டும்.

(2) பகுப்பாய்வொன்றின் முடிவு தொடர்பில் பிணக்கொன்றிருக்கும் விடயத்தில், பதிவாளரானவர், தமது கட்டுக்காப்பில் இருக்கும் மாதிரியின் அத்தகைய பாகத்தை, அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மத்தியட்சப் பகுப்பாய்வாளர் ஒருவருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் குற்றவழக்கில், இப்பிரிவின்கீழ் பகுப்பாய்வுக்கெனக் கேட்டுப்பெறப்பட்ட ஏதேனும் மாதிரி தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட பகுப்பாய்வாளர் ஒருவரால் அல்லது மத்தியட்சப் பகுப்பாய்வாளரால் ஒப்பமிடப்பட்ட பகுப்பாய்வாளரொருவரின் சான்றிதழெனக் கொள்ளப்படும் ஓர் ஆவணம், அதில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கு, முடிவான சான்றுதல் வேண்டும்.

25. (1) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், இலங்கையினுள் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியின் இறக்குமதி சுங்க நுழைவாயிலில் பரிசோதனை செய்வதற்கும், அத்துடன் மத்தியட்சப் பகுப்பாய்வாளரிடம் பரிசோதனைக்கும், அறிக்கைக்குமாக பகுப்பாய்வுக்கென மாதிரிகளை எடுப்பதற்கும் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்டபோது, அவ்வாறு செய்வதற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும். சுங்கத்தில் பரிசோதனை.

(2) மாதிரிகள் எடுக்கப்பட்ட ஏதேனும் விடயத்தில், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியானது, எடுக்கப்பட்ட மாதிரிகளின்மீது மத்தியட்சப் பகுப்பாய்வாளர் அறிக்கை செய்யும்வரை இறக்குமதியாளருக்கோ அல்லது ஒப்படையனுப்பப்பெற்றவருக்கோ ஒப்படைக்கப்படுதலாகாது.

(3) பத்தாம் பிரிவின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த நியமங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி இணங்கிச் செல்லவில்லையென மத்தியட்சப் பகுப்பாய்வாளர் அறிக்கை செய்வாராயின், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியானது விலங்குத் தீனியொன்றாக இலங்கையில் பயன்படுத்தப்படுவதற்கு இலங்கையினுள் அனுமதிக்கப்படலாகாது.

சந்தேகிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியைக் கைப்பற்றுதல்.

26. (1) ஓர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இச்சட்டத்தின் தேவைப்பாடுகளைமீறி, ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனி விற்பனைக்கென வைத்திருக்கப்பட்டுள்ளது அல்லது வெளிக்காட்டி வைக்கப்பட்டுள்ளது அல்லது முன்வைக்கப்பட்டுள்ளதென நம்பு வதற்கு நியாயமுள்ளவிடத்து, அவரினால் பகுப்பாய்வுக்கென மாதிரி ஒன்று எடுக்கப்பட்டு அதன்மீது அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டு அத்துடன் பணிப்பாளரானவர் அதைக் கையுதிர்ப்பதற் கெனக் கட்டளையொன்றை இடும் வரையில் அத்தகைய அங்கீகரிக் கப்பட்ட விலங்குத் தீனியைக் கைப்பற்றி வைத்திருத்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் கைப்பற்றப்பட்ட ஏதேனும் அங்கீகரிக்கப் பட்ட விலங்குத் தீனியானது, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் விருப்பில், அது கைப்பற்றப்பட்ட கட்டடத்தில் அல்லது இடத்தில் வைத்திருக்கப்படலாம் அல்லது களஞ்சியப்படுத்தப்படலாம் அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய வேறு இடத் திற்கு அகற்றப்படலாம்.

கட்டணங்கள்.

27. (அ) விலங்குத் தீனி ஒன்றுக்கு உரிமம் பெறுவதற்கான அத்துடன், ;

(ஆ) உரிமமொன்றைப் புதுப்பித்தற்கான விண்ணப்பம் ஒவ் வொன்றும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத் தகைய கட்டணத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இச்சட்டத்தை மீறுகைக்கான தண்டம்.

28. (1) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளை மீறுகின்ற அல்லது அத்துடன் இணங்கி ஒழுகத்தவறுகின்ற ஆளொவ்வொரு வரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரினாலான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னரான குற்றத்தீர்ப்பின்மீது, இரு ஆண்டுகளை விஞ்சாத காலமொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றிற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்று ஆட்கள் குழுவொன்றால் புரியப்பட்டுள்ளவிடத்து, அப்பொழுது—

(அ) அத்தகைய ஆட்கள் குழு, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன் றாயின், அந்தக் கூட்டிணைக்கப்பட்ட ஆட்கள் குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும், செய லாளரும், அல்லது அலுவலரும் ; அல்லது

(ஆ) அத்தகைய ஆட்கள் குழு, குழுமமொன்றாயின், அத்த கைய குழுமத்தின் ஒவ்வொரு பணிப்பாளரும்,

அந்தத் தவறுக்குக் குற்றவாளி எனக் கருதப்படல் வேண்டும் :

ஆயின், எவரொருவரினும், அந்த ஆள் எவரும், அவர் அத்த கைய தவறு தாம் அறிந்திருக்காது புரியப்பட்டுள்ளதென அல்லது தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கெனத் தாம் தகுந்த விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்துள்ளாரென எண்பிப்பாராயின் அவர் அத்தகைய தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் ஆகாது.

**இழப்பித்தல்.**

**29.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கென எவரேனும் ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிமன்றமானது, அத்தகைய தவறுக்காக நீதிமன்றம் விதிக்கக்கூடிய எவையேனும் தண்டங்களுடன் மேலதிகமாக, எப்பொருட்கள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அப்பொருட்கள் எவையும் பறிமுதலாக்கப்படுதல் வேண்டுமெனவும், குடியரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமெனவும் கட்டளையிடலாம்.

**நல்லெண்ணத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.**

**30.** இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் நல்லெண்ணத்துடன் புரியப்பட்ட அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக, எவரேனும் ஆளுக்கு எதிராகத் துடர்ச்சியெதுவும், குற்ற வழக்கெதுவும், அல்லது வேறு சட்ட நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

**ஒழுங்கு விதிகள்.**

**31.** (1) இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுதல்வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட, தேவைப்படுத்தப்பட்ட அல்லது விதித்துரைக்கப்பட்ட எவையேனும் கருமங்கள் தொடர்பில் அமைச்சரானவர், ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாக, அத்துடன் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பாக அல்லது அவற்றில் எவை தொடர்பாக, அமைச்சரானவர், ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியை வகுப்பாக்கம் செய்து, அத்துடன், ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியின் கூட்டுச்சேர்க்கை தரம், பண்பு என்பவற்றை விதித்துரைத்தற்காக ;

(ஆ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியின் விற்பனைக்கென அச்சிடுவதற்காக, சுட்டுத்துண்டு இடுவதற்காக, பொதியிடுவதற்காக, வெளிக்காட்டி வைத்திருப்பதற்காக, அத்துடன், விளம்பரம் செய்வதற்காக ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியின் பொதிகளின் அளவுகள், பரிமாணங்கள் அத்துடன் வேறு அளவுக்குறிப்பீடுகள் ;

(ஈ) விற்பனைக்கென, அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியை தயாரிக்கும் முறை, உற்பத்திசெய்தல், பாதுகாத்தல், பொதியிடுதல், களஞ்சியப்படுத்தல், அத்துடன் பகுப்பாய்வு செய்தல் ;

(உ) (i) உரிமமொன்றிற்கான விண்ணப்பமொன்று எம்முறையாகவும், எவ்வகையாகவும், செய்யப்படுதல்வேண்டும் என்பது;

(ii) உரிமமொன்றை வழங்குவதற்கென அல்லது புதுப்பித்தற்கெனச் செலுத்தற்பாலவையான கட்டணங்கள்

(ஊ) அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் விலங்குத்தீனியை உற்பத்தி செய்யும் அல்லது விற்பனைசெய்யும் ஆட்களை, இச்சட்டத்தைத் தகுந்தவாறு வலுவிலிடுவதற்கும், நிருவகிப்பதற்கும் பணிப்பாளர் அவசியமானதெனக் கருதும் அத்தகைய தகவல்களைத் தருமாறும், அத்தகைய புத்தகங்களையும், பதிவேடுகளையும் பேணுமாறும் தேவைப்படுத்தியும் ;

(எ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கெனப் பயன்படுத்தப்பட வேண்டிய நியதிகள் பற்றியும் ;

(ஏ) பரிசோதனை செய்வதற்கெனவும் பகுப்பாய்வு செய்வதற்கெனவும் தேவைப்படும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் மாதிரிகளை எடுப்பதற்கு ; அத்துடன்

(ஐ) இச்சட்டத்தில் விதித்துரைக்கப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ள எவையேனும் கருமங்கள்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அது வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் இயன்றளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(5) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதியானது அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதெனக் கருதப்படும் தேதிபற்றி கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**பொருள் கோடல்.**

32. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"விலங்குத்தீனி" என்பது, விலங்குகளின் அல்லது கோழிப்பண்ணையின் ஊட்டச்சத்துத் தேவைப்பாடுகளை முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்க முன்னுவதும், அவற்றிற்கு உணவாக்கின அது, அவற்றின் பேணுகை, வளர்ச்சி விருத்தித்திறனுக்கு உதவுவதும் ஆன தனியான அல்லது கூட்டுச் சேர்க்கப்பட்ட ஏதேனும் உற்பத்திப்பொருளெனப் பொருளாகுமென்பதுடன் தீனி வலுவூட்டியையும் உள்ளடக்கும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளர்" என்பது அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் அல்லது உதவி அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரும், கசெற்றிலான அறிவித்தல்மூலம் அமைச்சரால் அவ்வாறு பதிற்கடமை புரியவென அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆளும் எனப் பொருளாகும் ;

"தீனிச் சேர்க்கைகள்" என்பது, சுவையூட்டும் பொருட்களும், உயிர்ச்சத்துக்களும் சேர்க்கப்படக்கூடியதான, அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கூறுகளைக் கொண்டிருக்க வேண்டியதான, இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட தீனிப் பொருட்களின் கலவையால் பெறப்படும் உற்பத்திப் பொருள் எனப் பொருளாகும் ;

"இறக்குமதியாளர்" என்பது, இலங்கையில் விற்பனை செய்யும் அல்லது வழங்கும் நோக்கத்துக்காக ஏதேனும் விலங்குத்தீனியை இறக்குமதிசெய்யும் எவரேனும் ஆள் எனப் பொருளாகும் ;

"உற்பத்தியாளர்" என்பது,—

(அ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியை ஆக்குகின்ற ;

(ஆ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனியை விற்பனைக்கென மாற்றியமைத்துக்கொள்கின்ற, எவரேனும் ஆள் எனப் பொருளாகும்.

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டது எனப் பொருளாகும் ;

"மத்தியட்சப் பகுப்பாய்வாளர்" என்பது, 24 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒரு பகுப்பாய்வாளர் எனப் பொருளாகும்.

"விற்பனையாளர்" என்பது, உற்பத்தியாளரால் அல்லது இறக்குமதியாளரால், சில்லறையாக விற்பனைசெய்யும் நோக்கத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனி எந்த ஆளுக்கு விற்கப்படுகின்றதோ அல்லது ஒப்படைக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆள் எனப் பொருளாகும் ;

"தனித்தீனி" என்பது, தீனிப்பொருளின் கலவைக்கூறு ஒன்றையே கொண்டிருப்பதான ஒரு தீனி எனப் பொருளாகும் ;

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.